# அறிஞரின் அமுதமொழிகள்

அறிஞரின் அமுதமொழிகள்

S. V. V.

1. Pride, the never-failing vice of fools — Pope.
மூடர்களை ஒருபோதும் விட்டகலாத தீமையே கர்வம். (போப்)

2. Araise! Awake! and stop not till the goal is reached. — Vivekanandha.
எழுமின்! விழிமின்! கருதிய கருமம் கை கூடும் வரை உழைமின்! உணர்மின்!
(விவேகானந்தர்)

3. Time flies, death urges, knells callHeaven invites, Hell threatens. — Young.
காலம் பறக்கின்றது, மரணம் மன்றாடுகின்றது, சாவொலி சப்திக்கின்றது, வானம் வரவேற்கின்றது. (யங்)

4. Those thats come unto me, shall cross the river of life. — Bible.
பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தார் இறைவ னடிசேராதார். (குறள்)

5. To err is human, to forgive is divine. — Pope.
தவறுதல் எளிது, பொறுத்தலோ பெரிது. (போப்)

6. Ye have heard that it hath been said, Thou shalt love thy neighbour, and hate thine enemy. But I say unto you love your enemies — Bible.

'அயலானிடம் அன்பு கொண்டொழுகு; பகைவனை வெறுத்து பல்காலும் நட வென்று பலர் கூற நீ கேட்டிருப்பாய்; ஆனால் நான்சொல்லுவதைக் கடைப்பிடி:
"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயஞ் செய்து விடல்." (குறள்)

7. Sweet is pleasure after pain. — Dryden.
நிழலினருமை வெய்யிலில் தெரியும். (டிரைடென்)

8. My soul followeth hard after thee; thy right hand upholdeth me. — David's Psalms
துன்பவழியிற் றுயருற் றுனை நாடி அன்புட என்னான்ம அலைகின்ற அப்போதும் மன்னு திரு வலக்கரத்தால் மாண்புடையாய் நீ ஏற்பாய்! — டேவிட் தோத்திரங்கள்.

ஆனந்த போதினி - 1929 ஆம் - மே மீ